10. திரு. கோவை செழியன்

11. திரு. பு. செ. முத்துச்செல்வன்

12. திரு. சி. வே. வேலப்பன்

13. திரு. கா. காளிமுத்து

14. திரு. எம். செல்வராஜ்

15. திரு. ஆ. கருப்பையா

16. திரு. து. ப. அழகமுத்து

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1971-72-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 174-வது விதியின் கீழ் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களை இக் குழுவின் இந்த ஆண்டுத் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (5) அரசினர் தனித் தீர்மானங்கள்.

### (அ) கிழக்கு பாகிஸ்தான் (வங்க தேஷ்) உரிமை முழக்கம் வெற்றிபெற நல்லெண்ணம் தெரிவிக்கும் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வங்க நாட்டு மக்களைப் பற்றிய தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானமாகக் கொண்டுவர இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தீர்மானம் பாராளுமன்றத்தில் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட மாபையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்னுரைத்து இந்த மன்றம் வழிமொழிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முதலமைச்சர் அவர்களை அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதித்ததோடு ஒரு சிறு இணைப்பைச் சேர்த்து தீர்மானத்தைப் படிக்கிறேன்:

"கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் குரலும் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பும் அலட்சியப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அந்தப் பகுதி மக்கள் செய்துள்ள சுதந்திரப் பிரகடனத்தை எதிர்த்து நசுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையின் காரணமாக லட்சக் கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டது கண்டு இந்த மன்றம் தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவிப்பதோடு, வங்க தேஷ் மக்களின் உரிமை முழக்கம் வெற்றிபெற தமிழ்ப் பெருங்குடி மக்களின் நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

1971 ஏப்ரல் 3] [திரு. மு. கருணாநிதி]

இதிலே இணைத்திருப்பது "கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமைக் குரலும், பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பும் அலட்சியப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து" என்பதாகும்.

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். கிழக்குப் பாகிஸ்தானத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ரத்த வெறியும் அதன் காரணமாக விழுகின்ற பிணங்களும், இந்தியாவில் மாத்திரமல்ல, அனைத்துலகத்தில் இருக்கின்ற எல்லா நாட்டு மக்களும் கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவமாகும். இந்தச் சம்பவம் எவ்வாறு எழுந்தது என்பதை எண்ணினால், நடந்து முடிந்த பாகிஸ்தான் பொதுத் தேர்தலில், நீண்ட நெடுங்காலமாக கிழக்குப் பாகிஸ்தானத்தில் அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், மொழித் துறையிலும் உரிமைகள் முடக்கப்பட்டு, உரிமைகள் தடைப்படுத்தப் பட்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்த மக்களின் பிரதிநிதியாக அவாமி லீக் கட்சி தேர்தலில் ஈடுபட்டு அந்த அடிப்படையில் தங்களுடைய எண்ணங்களை மக்களின் முன் வைத்து வாக்குகளைக் கேட்டது. அவாமி லீக் கட்சியின் கொள்கைக்கேற்பப் பொதுத் தேர்தலில் அந்தக் கட்சிக்குப் பெரும்பான் மையான இடங்கள் கிடைத்தன.

ஆனால் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்குப் பிறகு அந்தத் தீர்ப்பை லட்சியம் செய்யாமல் பாகிஸ்தான் நடந்து கொண்ட காரணத்தால் கிழக்குப் பாகிஸ்தானத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சியைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்று பாகிஸ்தானத்தினுடைய ஜனாதிபதி யாகியாகான் அவர்கள் கிழக்குப் பாகிஸ்தான் டாக்கா நகரத்திற்கு வந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார். அந்தப் பேச்சு வார்த்தை நடை பெற்ற போது ஏடுகளில் வந்த செய்தி மேற்கு-கிழக்குப் பாகிஸ்தானுக்குப் பொதுவான கூட்டாட்சியை நிறுவ யாகியாகான் சம்மதித்து விட்டார் என்றும் தேர்தலில் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடம் பெற்றிருப்பதால் அந்தக் கூட்டாட்சிக்கு முஜ்பீர் ரஹ்மான் அவர்கள் பிரதமராக இருக்க யாகியாகான் சம்மதித்து விட்டார் என்றும், அவாமி லீக் கட்சியைச் சேர்ந்தவர் கிழக்குப் பாகிஸ்தானத்தில் முதலமைச்சர் பொறுப்பை ஏற்பார் என்பதற்கு சம்மதித்து விட்டார் என்றும் செய்திகள் வந்தன. இந்தப் பேச்சு வார்த்தைகள் முடிந்த அதே நேரத்தில் மத்தியக் கூட்டாட்சிக்குப் பிரதமராக ரஹ்மான் வரப் போகிறார், மாநிலத்திற்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் அலட்சியப்படுத்தப்படாமல் நிறைவேற்றப்பட இருக்கிறது என்ற இந்தச் செய்திகள் வந்து கொண்டிருந்த நேரத்தில் யாகியாகான் கராச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். கராச்சியிலிருந்து போர்ப் பிரகடனம் செய்தார். கிழக்குப் பாகிஸ்தான்மீது படைகள் ஏவி விடப்பட்டன. அந்த நேரத்தில் ரஹ்மான் பாகிஸ்தானத்தின் விரோதி என்றும், தேசத் துரோகி என்றும் பாகிஸ்தானத்தைத் துண்டு போடப் புறப்பட்டவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டு யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள், ரஹ்மான் அவர்கள் பிரகடனம் செய்திருப்பது போல் வங்கதேச மக்கள் லட்சக் கணக்கில் உயிர் விட்டிருக்கிறார்கள். எழு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இதுவரை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பலியிடப்பட்டிருக்கிறார்கள். இயற்கையின் கொடுமையான, ஆவேசமான தாக்குதலின் காரணமாகப் பல லட்சக் கணக்கான மக்களை இழந்த கிழக்குப் பாகிஸ்தான், போரின் விளைவாக இலட்சக் கணக்கானவர்களை இழந்து கொண்டிருக்கிறது. ரஹ்மான் குடும்பம் தவித்துக் கொண்டிருக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படித் தங்களுடைய உரிமைகளுக்காக பொது மக்கள் அளித்த தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டுமென்று எழுப்பிய கோஷத்திற்காக அந்த நாட்டு மக்கள், அந்த நாட்டு மக்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் பழி வாங்கப்படும் பரிதாபகரமான காட்சி அகில உலகத்தையும் திடுக்கிட வைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் இந்தியாவின் தலைமையமைச்சர் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். கேரள சட்டமன்றத்திலும், அஸ்லாம் போன்ற வேறு பல சட்ட மன்றங்களிலும் இரங்கலைத் தெரிவிக்கும் வகையிலும், கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்குத் தங்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டும் வகையிலும் கருத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நான் முன் வைத்திருக்கிறேன். தாங்கள் குறிப்பிட்டது போல் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் பேசியதற்கிணங்க எல்லாக் கட்சியினரும் ஒரு சேர இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வங்க தேசத்தில், கிழக்குப் பாகிஸ்தானத்தில் அல்லலுறும் மக்களுக்கும், உயிரை விட்டுக் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் மக்கள் குடும்பத்திற்கும் மற்றும் அனைவருக்கும் நான்கு கோடி தமிழ் மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு நம்முடைய நல்லெண்ணம் அவர்கள்பால் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தோடு பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய உணர்வுகளையும் நான் இணைக்கிறேன். இந்தத் தீர்மானத்தை அவை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளுவதாகக் கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* பேரவைத் தலைவர் அவர்களே, "1971-72-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்வதற்கென ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு இப்பேரவை சட்ட மேலவைக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.